பக்கங்கள்நான்கு:

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கூடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 04 திங்கட்கிழமை [21-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 321

சண்டிலிப்பாய், சித்தன்கேணியில் விமானக் குண்டு வீச்சு அகோரம்!

ஞாயிறு தினமானதால் 30 சிறுவர்கள் தப்பினர்

மாகியப்பிட்டியில் இடம் பெற்ற குண்டு வீச்சு நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற் கொள்ளப்பட்டதால் முப்ப துக்கும் குறையாத சிறார் களின் உயிர்கள் காப்பாற்றப் பட்டன.

குண்டு வீச்சுக்கு இலக்கான வீட்டில் சிறுவர் பாடசாலை ஒன்று இயங்கி வந்ததாக வும்—

அங்கு முப்பதுக்கும் குறை யாத சிறார்கள் கல்விபயின்று வந்ததாகவும் தெரிவிக்கப்படு கிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் சிறுவர் பாட சாலை நடைபெறவில்லை. இதனால் அநியாய உயிரிழப் பிலிருந்து சிறுவர்கள் காப் பாற்றப்பட்டனர்.

குண்டு வீச்சினால் மேற் படி வீடு முற்றாகச் சேத மடைந்ததும், வீட்டிலிருந்த இருவர் உயிரிழந்ததும் குறிப் பிடத்தக்கவை. (உ-15)

திறந்த பதுங்குகுழிகளை அமைக்க வேண்டுகோள்

"வான் தாக்குதல் மேற் கொள்ளப்படும்போது பதற் றமடைந்து சிதறி ஓடுவதன் மூலம் அநாவசியமான உயி ரிழப்புகள் ஏற்படும். இந்நிலை யைத் தவிர்க்க திறந்த பதுங்கு குழிகளை அமையுங் கள்."

—இவ்வாறு மக்களிடம் விடுதலைப் புலிகள் கோரி யுள்ளனர்.

"நிங்கள அரசின் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களி லிருந்து எம்மை நாமே பாது காக்க பதுங்கு குழிகள் அமைக்க வேண்டும்.

வீடுகள், கல்விக்கூடங்கள், சந்தைகள், ஆகதிமுகாம்கள், தொழில் நிலையங்கள் மற் றும் மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் திறந்த பதுங்கு குழிகளை அமைக்க வேண் டும்.

இரண்டு அடி அகலமாக வும், நாலு அடி ஆழமாகவும், சுமார் 6, 7 அடி நீளத்திலும் திறந்த பதுங்கு குழிகளை அமைத்தலாம்"— என்று விடு தலைப் புலிகள் தெரிவித்துள் ளனர். (உ-3)

42 பேர் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், அக். 21

பல்வேறு காரணங்களுக் காக விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 42 பேர் இன்று காலை 10 மணிக்கு கோண்டாவி லிலுள்ள விடுதலைப் புலி களின் மாவட்டச் செயலகத் தில் வைத்து விடுவிக்கப்பட வுள்ளனர்.

விடுவிக்கப்படுவோரின் விப ரம் வருமாறு:

கிளிநொச்சியைச் சேர்ந்த வர்களான ச. சுரேஷ்குமார், அழகுபாலா, வே. மோகன ராஜா, க. மனோகரன், ந. இளங்கோவன், ஆ. சுப்பிர

[3 ஆம் பக்கம் பார்க்க]

மூவர் பலி; எண்மர் காயம்

யாழ்ப்பாணம், அக். 21

சித்தன்கேணியிலும், சண்டிலிப்பாய்-மாகியப்பிட்டியிலும் ஸ்ரீலங்கா விமானப் படை பொம்மர்கள் நடத்திய அகோரக் குண்டு வீச்சில் அப்பாவிப் பொது மக்கள் மூவர் உயிரிழந்தனர்; எட்டுப் பேர் படுகாயமடைந்தனர்.

பல வீடுகள் மற்றும் பெறுமதிமிக்க உடைமைகள் நாசமாகின.

நேற்றுக் காலை 9 மணிக்கு சுற்றி வட்ட மிட்ட மூன்று சித்தன்கேணிப் பகுதியைச் பொம்மர்கள் சுமார் 15 நிமிட நேரம் அப்பகுதியில் மாறி மாறி குண்டுகளைப் பொழிந்தன.

சித்தன்கேணி - சங்கானை வீதியில், சித்தன்கேணிச் சந்தியில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள ஒரு வீட்டின் மீது வீசப்பட்ட குண்டு களினால் வயோதிப மாது

[4 ஆம் பக்கம் பார்க்க]

யாழ். நகரப் பகுதியில் நேற்று அசாதாரண அமைதி

யாழ்ப்பாணம், அக். 21

யாழ். நகரப் பகுதியிலும் சுற்றுப் புறப் பகுதிகளிலும் நேற்று அசாதாரண அமைதி நிலவியது.

இந்தப் பகுதிகளில் நேற்று பெரிதாக தாக்குதல் சம்ப வங்கள் ஏதும் நிகழவில்லை.

இடம்பெயர்ந்துசென்றிருந் தவர்களில் அனேகர் தமது இருப்பிடங்களுக்குத் திரும் பிக்கொண்டிருந்ததை அவ தானிக்க முடிந்தது. சிலர் வீடுகளைப் பார்வையிட்டு விட்டு, திரும்பிச் சென்ற னர்.

குருநகர் பகுதியும் நேற்று வழமைக்குத் திரும்பி இருந் தது. அங்கு இறைச்சிக் கடை கள், சந்தைகள் போன்றவை செயற்பட்டன.

நகரின் குறிப்பிட்ட சில பகுதிகள் மட்டும் சனநட மாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேசமயம், நேற்று மாலை 4 மணியளவில் அவ்ரோ ஒன்று நகரை வட்ட மிட்டபோதும் தாக்குதல் எதனையும் நடத்தாது திரும்பிச் சென்றுவிட்டது.

(ஒ-5-51-15)

இந்தியாவில் பூமியதிர்ச்சி; 300 பேர் உயிரிழப்பு!

புதுடில்லி, அக். 21

இந்தியாவில் வடஇந்திய மாநிலங்கள் பலவற்றில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பூமி யதிர்ச்சி ஏற்பட்டது.

அதன் காரணமாக உத்த ரப் பிரதேச மாநிலத்தில் குறைந்தது 300 பேர் உயி ரிழந்தனர் என்றும் 3 ஆயிரத் துக்கு அதிகமானோர் காய மடைந்தனர் என்றும் அறி விக்கப்படுகிறது.

6.1 ரிக்டர் அளவு இருந்த அந்த நில நடுக்கம், சுமார் 45 வினாடிகள் நீடித்தது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

பலாலி ராணுவம் கண்டபடி சூடு!

யாழ்ப்பாணம், அக். 21

பலாலி முகாம் பகுதியில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதி காலை வரை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி வேட்டுக் களைத் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மாவிட்டபுரம் பகுதி இரா ணுவத்தினரும் கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தவண் ணம் இருந்தனர்.

இதேசமயம்—

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மாதகல் பகு தியை நோக்கி ஆட்லறி ஷெல் கள் ஏவப்பட்டதாகவும் கூறப் பட்டது. (ஒ-15)

கோட்டை முற்றுகை முறியடிப்பு போன்ற நடவடிக்கையே இப்போது!

தளபதி ஹமில்டன் கூறுகிறார்

கொழும்பு, அக். 21

தற்போது யாழ். குடா நாட்டில் மேற்கொள்ளப் படும் இராணுவ நடவடிக்கை கள், யாழ். கோட்டை முற்று கையைத் தகர்ப்பதற்கு கடந்த வருடம் மேற்கொள் ளப்பட்ட பாரிய "ஒப்ப ரேஷன் சங்கி" தாக்குதல் நடவடிக்கையுடன் ஒப்பிடக் கூடியது.

இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஹமில்டன் வன சிங்கா இவ்வாறு நேற்று முன் தினம் தெரிவித்தார்.

ஆயுதப்படையினரின் கூட் டுத் தலைமையகத்தில் நடை பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

"வடக்கு - கிழக்கின் முழுப் பிரதேசங்களிலும் அரசாங் கத்தின் அதிகாரத்தை மீண் டும் நிலைநாட்டுவதே எமது இலக்காகும். அதற்கான நட வடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றோம்.

இந்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக எதை யும் அறிவது அல்லது கருத்து எதனையும் தெரிவிக்க இரா ணுவத் தளபதி மறுத்து விட் டார்.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஹெண்டா சி-70 எக் கொனோமைவர் [விலப்பு நிறம்] விற்பனைக்கண்டு தொடர்பு: உ விமலேந்திரன் யூனிட்-சல் வீடியோ, 40 ஏ, அரசடி வீதி, திருநெல்வேலி மெற்கு, யாழ்ப்பாணம். [18512]

வைத்திய சேவை

தலைமுடி உதிர்தல், தலை மயிர் நரைத்தல், தீராத தலைவலி, நரம்புத்தளர்ச்சி, தேகபருமன், குழந்தைகளின் ரோகங்கள், மாதவிடாய்க் கோளாறுகள் எதுவானாலும் சுகமடைய வேண்டாம். இன்றே நாடுங்கள்! நலமடையுங்கள்!! டாக்டர் த. சிவானந்தன், D. A. M., R. A. M. P. [இலங்கை] சிவா வைத்திய சாலை, 384 கோவில் வீதி, நல்லூர். [18482]

சோதிடம்

கலியில் தெரிந்தால் உதவி யோகம் கிடைக்குமா? விசா பாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? வெளி நாடு போகலாமா? உங்கள் பிரச்சினை எதுவானாலும் உரிய பதில் தரப்படும். ஜாதகம், குறிப்பு எழுதுவும், கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன் பிரபல சோதிடர் 384, கோவில் வீதி, நல்லூர். [18488]

ரைப்ரைட்டர்கள் தேவை

தமிழ் ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. மற்றும் பழுதடைந்த உதிரிப் பாகங்களுக்கு உபயோகிக்கக் கூடிய தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூட்டா என்டர்பிறைசஸ் 39/17 மிஸ் சாரா நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். [தி/0694]

வானொலி நாடகம்

வானொலி நாடகம் எழுதிப் பழகவேண்டுமா? ஒரு நாடகமென்றால் என்ன? 177 வானொலி நாடகங்கள் எழுதிய அரசியூர் நடராஜரத்தினம் பிள்ளையின் நூல்களை வாசியுங்கள். கெட்டிக்காரர்கள் 25/-. முதலாம்பிள்ளை 30/-. பூபாலசிங்கம், சிறீலங்கா, தமிழருவி. [18456]

வைத்தியம்

சென்னிமாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீவிசம், தலையிடி, தலை சுற்றல், சூலைக்குத்து, சரும நோய்கள் மற்றும் சில வியாதிகளையும் குணப்படுத்துவர் வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [4325]

தொலைத் தொடர்பு சேவை

யாழ். குடாநாட்டில் பின்வரும் இடங்களில் முகவர்கள் தேவை.

★ சங்கானை ★ சுன்னாகம்
★ அச்சுவேலி ★ பருத்தித்துறை
★ சாவகச்சேரி ★ யாழ்ப்பாணம்

குறிப்பு: சுவிஸ் ஞானிய நாட்டிலில் நிறுவனமதி உள்ள வர்த்தக உரிமையாளர்கள் மட்டும் பதிக்கவும்.

கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

S. கமலானந்தன்,

நில்கந்தா, மானிப்பாய். [4345]

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

வெளிவாரி பட்டப் படிப்பு

தணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும், 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புதுமுகம் நிழ்ச்சியும் 1991-10-22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள், இந்த நிழ்ச்சிகளில் பங்குகொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகளில் இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ளன.

முதல் அமர்வு — முதற்கலை மாணவர்கள் — காலை 9-00 — மு.ப. 11-00

இரண்டாவது அமர்வு:— முதல்வர்த்தக மாணவர்கள் முற்பகல் 1 30 1-00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20-10-1991 வெளிவாரிப்பதிவுப் பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியாதென்பதை அறியத்தருகின்றோம்.

பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம். (தி/0826)

ECALOM – மனோகராச்சந்தி.

A/L 93

பொருளியல் — உதயன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — பதில்
அளவையியல் — விசுவி

இன்று ஆரம்பம்: (21-10-1991)
மாலை 5-00 மணி (பொருளியல்)

A/L 1991
Day Class பொருளியல்

★ கேள்வித் தோட்டம் ★
(நியதியும், வினா-விடையும்)

ஆரம்பம்: 21-10-1991 (பி.ப. 1-00 மணி)

(தி/0730)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

அவசர திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை தொழில் முனைற்ற திட்டங்களை விரிவாக நடவடிக்கை எடுத்துள்ளது. கீழ்க்காணும் பல்வேறு திட்டங்களை நடத்துவதற்கான திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

அ. விவசாயம் ஆ. நெசவு வேலை
இ. மீன்பிடி ஈ. தோல்பொருள் உற்பத்தி
உ. தொழிற்கல்வி ஊ. வறுமைக்குறைந்தோருக்கான சுயதொழில்.

அவ்வத் துறையில் போதிய தேர்ச்சி, அனுபவம், வறுமைக்குறைந்த ஆற்றல் பெற்றவர்கள் மத்திரம் விண்ணப்பிக்கவும். வயதெல்லை வரையறுக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் 25-10-91 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். 26-10-91 முற்பகல் 9.00 மணிக்கு கிளை அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் பெயர் பட்டியல் கிளை அலுவலகத்தில் 25-10-91 (பிற்பகல் 4.00 மணிக்கு) வெளியிடப்படும்.

73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், 18-10-91. — கௌரவ செயலாளர்.

[தி-0843]

அணைந்த தீபத்தின்
2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருஞானசம்பந்தர் சிவநாதன்

அன்னை மடியில்: 17-09-1963
ஆண்டவன் அடியில்: 12-10-1989

திதி: 21 — 10 — 1991

எல்லோர்க்கும் இனியவனாய்
நல்லோனாய் வாழ்ந்த — நீ
சொல்ல மற் றொளிர்மணி
சென்ற தோமம் எமை வாட்ட
நெஞ்சம் புதைக்கின்றோம்
நினைவெல்லாம் நீயானாய்
நெஞ்சிருக்கும் வரை — நீ
நிறைந்திருப்பாய் என்றென்றும்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

சொக்குவில் மேற்கு. [4350]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Sri Lanka Red Cross Society
Mullaitivu Branch
Dental Surgeon & Dental Therapist

Wanted Dental Surgeon and Dental Therapist for Mullaitivu District. Please apply before 25-10-1991 and appear for interview on 26-10-1991 at 1 p.m. in our Branch office.

Hony. Secretary,
Sri Lanka Red Cross Society, Jaffna Branch.
73 Kandy Road,
Jaffna. [C-0842]

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 02 — 1911

மறைவு: 21 — 10 — 1988

அமரர் வீ. அப்பாத்துரை

இறைவன் அருகில் அமர்ந்தீர் போற்றி!

உமது பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,

169, கண்டி றோட்,
யாழ்ப்பாணம். [18514]

45 ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்: 13 — 02 — 1972

தாயக மீட்பில்: 07 — 09 — 1991

(வீரவேங்கை வசந்தா)

சண்முகநாதன் ஜெயவதனி

கிரித்து கிரித்து எம்மை சிறையில் வைத்த
கிங்கார ஒலியமே எங்கு சென்றாய்
மரித்து விடவில்லையம்மா நீ - எங்கள்
மனங்களில் நீ ஒளியமய் நிறைந்து விட்டாய்
மணலாறில் மண்மீட்கப் புறப்பட்ட
– எங்கள் வசந்தாவே!
எதிரியின் பிணமேட்டில் வெற்றி கொண்டு
வீரமரணத்தை அணைத்தாயோ - நீ
விண்ணுலகம் சென்றாயோ
உன்பிரிவால் வாடும்ற உறவினருக்கு - தமிழ்த்தில்
பொன்னெழுத்தால் சரித்திரமே படைத்து விட்டாய்
உன் ஏட்டைப் புரட்டியே பார்க்கட்டும் புலியும்
பொன்னெழுத்தால் பொறிக்கட்டும் தமிழீழம்!

உன் பிரிவால் துயருறும்:

அப்பா, அம்மா, சகோதரி, சகோதரன்,
மாமாமார், மாமிமார், மைத்துனர்மார்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்,
பேரன்மார், பேர்த்திமார்.

நாவலர் வீதி,
மாதகல் வடக்கு. (18506)

உதயன்

புரிந்துகொள்ள வேண்டும்

ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்கள், ஆயுத தளபாடங்கள், மற்றும் இராணுவ நிபுணத்துவ வசதி என்பனவற்றை வழங்கும் நாடுகள் அவற்றை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு "மனித உரிமைகள் போராட்டவாதிகள் குழு" என்ற அமைப்பு, உலக நாடுகளை வலியுறுத்திக் கேட்டுள்ளது. பிரஸ்தாப குழு சொல்வதற்கு செவிசாய்த்து, ஆயுத மற்றும் உதவிகளை உலக நாடுகள் நிறுத்தக் கூடிய அளவுக்கு, அந்தக் குழு செல்வாக்கு மிக்கதா என்பது சந்தேகத்துக்கு உரியதாகும்.

எனினும் லண்டனில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் அந்தக் குழுவின் உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா அரசின் உண்மையான நோக்கையும் போக்கையும் கண்டுபிடித்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

வன்முறைகளை ஒடுக்குவதற்கெனக் கூறிக்கொண்டு, வெளிநாடுகளிடம் ஆயுதம் மற்றும் இராணுவ நிபுணத்துவ சேவைகளை ஸ்ரீலங்கா அரசு பெற்றுக்கொள்கிறது. ஆனால் அந்த ஆயுதங்களையும், நிபுணத்துவங்களையும் பயன்படுத்தி அது மனித உரிமைகளை மிகப் பெருமளவில் மீறுகிறது. இதுவே மனித உரிமைகள் போராட்டவாதிகள் குழுவின் குற்றச்சாட்டாகும். அதுவே உண்மையும் ஆகும்.

வெளிநாடுகள் வழங்கும் அல்லது விற்கும் ஆயுதங்களினாலும், நவீன போர் விமானங்கள், கப்பல்கள் போன்ற ஆயுத தளபாடங்களினாலும் உதவியுடன் அரசு சாதாரண மனித உரிமைகளை மட்டும் மீறவில்லை தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து வருகிறது. ஒர் இனத்தின் வாழும் உரிமையை மறுப்பது — அவர்களை அழிப்பது — மனித உரிமை மீறல்களில் மிகமிகக் கொடுமையான தாகும். அதனைவிடக் கூடிய மனித உரிமை மீறல் எதுவும் மனித வாழ்க்கையில், உலக சமுகத்தில் இருக்க முடியாது.

மனித வாழ்வின் மிகப் பெரிய, பாரதூரமான, கொடுமையான மனித உரிமை மீறல் — இன ஒழிப்பு — ஸ்ரீலங்காவில் நடந்து வருவதை உலக நாடுகள் இன்னும் முழுதாகப் புரிந்து கொள்ளவில்லை. அல்லது புரிந்தும் புரியாதன வரகச் செயற்படுகின்றன.

ஸ்ரீலங்கா அரசு வன்முறைகளை அடக்குவதற்கென்று வெளிநாடுகளிடம் இருந்து ஆயுதங்களை வாங்கி, தானே வன்முறை புரிந்து வருகிறது. வன்முறைகளைத் தூண்டி வருகிறது; வன்முறைகளுக்குக் காரணமாக இருந்து வருகிறது.

தமிழ்ப் பகுதிகளில் வன்முறைகள் இடம்பெறுகின்றன என்றால் மக்களின் உரிமைகள் வழங்கப்படாதிருப்பதும், மீறப்படுவதும் தான் காரணம். இதனைத் தென்னிலங்கைத் தலைவர்கள், ஆட்சித்தலைவர்கள் என்று பலரும் பல சந்தர்ப்பங்களிலும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்! ஒருவரை மாறி மற்றவர் மீது குற்றஞ்சாட்டியும் வந்திருக்கிறார்கள்.

எனவே "மனித உரிமைகள் போராட்டவாதிகள் குழு" விடுத்த வேண்டுகோளை, வலியுறுத்தியுள்ள விடயத்தை, உலக நாடுகள் ஆழமாக, நுணுக்கமாக் ஆராய்ந்து செயற்பட வேண்டும். பணத்துக்காகவேனும் ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்களையும், ஆயுத தளபாடங்களையும் விற்பது பெரும் பாவம், மனிதாபிமானம் இல்லாத செயல் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நகரில் 11 முகாம்கள்

யாழ்ப்பாணம், அக். 21

தீவுப் பகுதி மற்றும் நகரப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த மக்களின் பெரும் பகுதி, யாழ் மாநகரப் பிரதேசத்தில் தற்போது வரை மொத்தம் பதினொரு முகாம்கள் அமைக்கப்பட்டன.

அனைத்தினம் மகாவித்தியாலயம், அடைக்கலமாதா தேவாலயப் பாடசாலை, ரயில் நிலையம், வேம்படி மகளிர் கல்லூரி, மகேஸ்வரி வித்தியாலயம், நாமகள் வித்தியாலயம், சாதனா பாடசாலை, பெரியபுலம் மகா வித்தியாலயம், மங்கையர்க்கரசி வித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர் மடம் (தமிழ்), வைத்தீஸ்வரா வித்தியாலயம் ஆகிய இடங்களிலேயே அதிக முகாம்கள் இயங்கி வருகின்றன.

42 பேர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணியம்—

முல்லைத்தீவைச் சேர்ந்த செ. ஆனந்தராஜா, இ. நாகராஜா, சி. வடிவேல், (ஓட்டுசுடானைச் சேர்ந்த ப. சிவகணேஷ்—

சுன்னாகத்தைச் சேர்ந்த த. ஜெயசிகுமார், வே. ஞானராஜா, ஆ. செல்லகுமார், அ. அமலராஜன்,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த க. கமலநேசன், வ. ஞானப்பிரகாசம், தே. மோகன், பொ. இரவீந்திரன், ச. மனோகரன், இ. அன்ரன், அ. இராஜன் அலோசியஸ், செ.போ நியூட்டன், இ. கிருஷ்ணகுமார், கி. ஆம்ஸ்ரோங் பிற்றர், ச. தஷ்பரதன்—

நாவற்குழி—கைதடியைச் சேர்ந்த ஜோர்ஜ் நிமலன், மு. கணேசரஞ்சன், மா. சற்குணராசா, எப். அருளானந்தம், செ. விஜயேந்திர

வடமராட்சியைச் சேர்ந்த கா. குகதாசன், எஸ். அந்தோனிப்பிள்ளை சூ. பூலோகசிங்கம், அ. பெனடிக்ற் துரைசிங்கம், அ. விஜயலாஸ், வி. தே. இரிஸ்ரி, கா. அல்போன்ஸ்—

மற்றும் செ. மகிலாமணி (உரும்பராய்), இ. மேகநாதன் (மானிப்பாய்), செல்லம்மா திருஞானம் (மல்லாகம்), இ. விக்கினேஸ்வரன் (இணுவில்), செ. அருளம்பலம் (சாவகச்சேரி). (உ-3)

இதே வேளை தென்மராட்சியில் அதிமுகாம்களின் எண்ணிக்கை பதினேட்டாக உயர்ந்துள்ளது. சோபாய் பகுதியிலும் இப்போது மொத்தம் 12 முகாம்களில் மக்கள் தங்கியுள்ளனர்.

யாழ். நகரில் உள்ள 7 முகாம்களில் மட்டும் தீவுப் பகுதியைச் சேர்ந்த 1 625 குடும்பங்கள் தங்கியுள்ளன.

[அ 3-167]

ஹராரேயில் சார்க் தலைவர்களை பிரதமர் சந்தித்தார்

ஹராரே, அக். 21

ஸ்ரீலங்காவின் பிரதமர் திரு டி. பி. விஜேதுங்கா இங்கு நடைபெற்ற காமன்வெல்த் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட சார்க் தலைவர்களுடன் தனித் தனியே சந்தித்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ் பங்களாதேஷ் பிரதமர் நவாஸ்ஷெரிப், மாலைதீவு ஜனாதிபதி கையூம், பங்களாதேஷ்பிரதமர் கலிதா ஷியா ஆகியோருடன் திரு. விஜேதுங்க பேச்சுக்கள் நடத்தினார்.

அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறும் சார்க் மாநாட்டில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து, இச்சந்திப்புகளின் போது ஆராயப்பட்டது

[அ]

இந்தியாவில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உத்தரப் பிரதேசத்தில் அமோரா எனுமிடத்தில் குன்றுகளில் பூகம்பம் ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் அதிகாலை சுமார் 1 55 மணிக்கு கதவுகளும் ஜன்னல்களும் கிடுகிடுவென்று நடுங்குவதை கண்டு பீதியுற்ற மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தனர்.

தலைநகரில் உண்டான மிகக் கடுமையான அதிர்ச்சி இது என்று வானிலை ஆய்வு கூட அலுவலகம் தெரிவித்தது.

பஞ்சாப், ஹரியான சண்டிகார், ஜம்மு காஷ்மீரின் சில பகுதிகள் ஆகியவற்றிலும் அதிர்ச்சி இருந்தது.

(ஒ-எ-த)

படையை எந்த முனையில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வாழ்வோ, சாவோ, எது வரினும் எமக்கு இந்த மண்ணிலதானே வரும் போராடு! என்று காலம் எங்கள் தலைமுறைக்குக் கட்டளையிட்டுள்ளது. காலமிட்ட கட்டளையை ஏற்றுத்தானே நாங்கள் களத்தில் நிற்கின்றோம். பிறகு எங்கால் வரல மா? கால் வலிக்க அலைந்து திரிய லாமா?

குண்டு விழ விழ குடியிருப் போம். வீடு இடிந்து மேடாகட்டும் அதிலிருந்து நாங்கள் முளை விடுவோம். நாங்கள் நெருப்பாற்றைக்கூட நீந்திக் கடக்கக் கூடியவர்கள் என்ற செய்தியை எதிரிக்கு சொல்லி வைப்போம்.

உண்மைச் செய்திகளை நாங்கள் உங்களுக்கு உடனுக்குடன் அறியத்தருவோம். மண்டைதீவு வரையும் ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறியுள்ளது உண்மைதான். இராணுவ முக்கியத்துவம் இல்லாத பொர்ட்டல் வெளியில் போராடி எதிரியை பலத்தை ஏன் இழக்க வேண்டும்? எமக்கெனக் குடாற்படை வேண்டும்.

அங்கே எதிரியை எதிர் கொள்ள பலம் மிக்க கடற்படை ஒன்றைக் கட்டி எழுப்ப வேண்டும். கடற்புலிப்படை விரிவான பின்னரே கடல் சூழ் பிரதேசங்களில் நாம் எதிரியை எதிர் கொண்டு இலக்கு வைத்து முடிப்போம்.

எனவே இன்று சொஞ்சம் தள்ளிநின்று அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். அவ்வளவுதான்!

மற்றும்படி எந்த முனையிலும், எந்த இராணுவ நடவடிக்கையையும் சந்திக்க விடு தலைப் புலிகள் தயாராகவே இருக்கின்றார்கள். முன்னேறி வாரீகள் என்று கருதும் முனைகளில் எங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளோம். குடாநாட்டின் எந்தக் குச்சொழுங்கையால் எதிரி புறப்பட்டு வந்தாலும், வந்தவுடன் எதிர்க்குப் பாடை கட்டும் பலத்துடன் புலிகள் பார்த்திருக்கின்றனர். எனவே வதந்திகளை நம்பி நீங்கள் திக்கற்ற பறவைகளாகி திரியாதீர்கள்.

நிலவுக்குப் பயந்து பரதேசம் போவது போல, குளிரில் இருந்து தப்புவதற்காக குடியிருக்கும் வீட்டை கொளுத்துவதுபோல எதற்கும் அஞ்சி நாங்கள் ஓடிவிடாது நிலையாக நின்று கொண்டு எதிரியைச் சந்திக்கத் தயாராகுவோம்! அதிவுகள் எமக்குப் புதுவையல்ல அல்லது ஆனால் எமது அடுத்த தலைமுறையின் வழிவிடாகவாவது எமது பாரம்பரியத்தைப் பலப்படுத்தி அதற்கு இடம் தவிலேயே நிமிர்ந்து நிற்போம்! நிமிர்ந்து நிற்போம்!!

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

ஜேர்மனியில் நாஸிகளின் ஆயுதங்கள் பல மீட்பு!

பொன், அக். 21

ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ள வெளி நாட்டுப் பிரசைகள் தங்கியுள்ள விடுதிகள் மீது தாக்குதல் நடத்திவரும் நாஸி தீவிரவாதக் குழுக்கள் நிலைகொண்டிருந்ததாகக் கூறப்படும் 40 கட்டடங்களைப் பொலீஸார் முற்றுகையிட்டு ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

கிழக்கு ஜேர்மனியில் உள்ள 12 நகரங்களில் இம்முற்றுகை கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிகள், ரவைகள், கத்திகள் ஆகியன அப்போது கைப்பற்றப்பட்டன. (உ-எ)

சந்தோசம் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 21

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், திருகோணமலை மாவட்ட முன்னாள் தளபதியுமான செல்வன் சந்தோசத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கு அரியாலை செல்லகிளி அம்மாள் விடமைப்புத் திட்டத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

அதற்கு முன்னதாக பிற்பகல் 3 30 மணிக்கு அரியாலை தபால் கட்டுச் சந்தி அருகில் சந்தோசம் மாஸ்டர் நினைவுத் தூபி திறந்து வைக்கப்படும். [உ]

ஜெயலலிதாவுக்கு டாக்டர் பட்டம்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க சென்னை பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

இத் தகவலை தினத்தந்தி நாளிதழ் முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

அகதிமுகாம்களைத் தொடர்ந்து பராமரிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், அக். 21

தீவுப்பகுதி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட அகதி முகாம்களைப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அரச அதிபரிடம் இது குறித்துத் தெரிவித்துள்ளது.

முகாம்களைப் பராமரிக்கத் தங்களிடம் போதிய உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை என்று அவர்கள் தெரிவித்திருப்பதாகவும் அறியவருகிறது.

ஆகையால், முகாம்களுக்குத் தேவையான உலர் உணவு வகைகளை வழங்குமாறு அவர்கள் அரச அதிபரிடம் கேட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபருடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் இன்று கூடி ஆராயவுள்ளன. [அ-3]

ஆஸ்பத்திரி படுகொலை நினைவஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், அக். 21

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் வைத்து, நோயாளர்கள், பொது மக்கள், டாக்டர்கள், ஊழியர்கள் என்று மொத்தம் 96 பேரை, இந்திய இராணுவம் கொடூரமாகக் கொன்று குவித்த நான்காவது ஆண்டு சோக நினைவு நாள் இன்றாகும்.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் 21 பேரின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று காலை ஆஸ்பத்திரியில் நடைபெறுகிறது.

21 பேரின் திருவுருவப் படங்களும் வைத்து தீபாராதனை செய்து, அஞ்சலி நிகழ்ச்சி ஆரம்பமாகும். [அ-15]

கடலில் இராட்சத பனிப்பாறை

லண்டன், அக். 21

தெற்கு அத்லாந்திக் கடலில் மூவாயிரம் சதுரமைல் விஸ்தீரணம் கொண்ட பனிப்பாறை மிதந்து செல்வதாக அறிவிக்கப்படுகிறது.

இது கப்பல் போக்குவரத்திற்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

பனிப்பாறையின் பரப்பு சுவிற்சர்லாந்து நாட்டின் விஸ்தீரணம் அளவு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மண்டைதீவில் ஏழு படையினர் காயம்

கொழும்பு, அக் 21

மண்டைதீவைக் கைப்பற்றும் சண்டையில் ஏழு படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன என இந்திய வானொலி அறிவித்தது.

மண்டைதீவில் படையினர் கண்ணிவெடிகளை அற்றும் வேலையிலும், தமது நிலைகளைப் பலப்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்று ரூபவாஹினியில் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தாம் எதிர்பார்க்கும் தீர்வை பிரபா அறிவிக்க வேண்டும்!

'குயாக்கர்' சமாதானக் குழு வலியுறுத்தியதாம்!

கொழும்பு, அக். 21

'இலங்கை இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும், தாம் முற்றுமுழுதாக எதிர்பார்க்கும் தீர்வையும் விடுதலைப் புலிகள் அறிவிக்கவேண்டும்'.

விடுதலைப் புலிகளின் தலைவர்களிடம் தாம் இவ்வாறு வற்புறுத்தியதாக 'குயாக்கர்' என்ற மேற்குலக சமாதானக் குழுப் பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனராம்.

கடந்தவாரம் வடபகுதிக்கு விஜயஞ் செய்த இக்குழுவினர் அங்கு விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராஜா (மாத்தயா), அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்து இவ்வாறு தெரிவித்தனராம்.

விடுதலைப் புலிகள் தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவித்தால் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்ப்பதில் சர்வதேச சமூகம் தனது முழுமையான பங்களிப்பை வழங்க முடியும் என்றும் அவர்கள் கூறியதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. [உ-தி]

திருமண வைபவ இடமாற்றம்

இன்று [21-10-91] பகல் 2.10 மணி முதல் 3.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் திருநிறை செல்வன் சி. சிவகிரி [ஹட்டன் நஷனல் வங்கி, கொழும்பு.] க்கும் திருநிறை செல்வி இ. ஹம்சத்வனி [யாழ். புனித மரியாள் வித்தியாலயம்] க்கும் நல்லூர் சிவன்கோவிலில் நடைபெறவுள்ள திருமண வைபவத்தின் போது மணமகளின் இல்லம் மேற்குறும் விலாசத்திற்கு மாற்றப்பட்டுள்ளது

திருமதி ப. இரத்தினகோபால்
228/1, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(18516)

தேவை

இரவு நேர மேற்பார்வையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

படைகள் மற்றும் பொலீஸ் சேவையில் [Ex-Servicemen] முன்னர் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிப்போர்
15, இரண்டாவது ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகின்றனர்.

[C/0845]

31 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. சினிவாசகம் முருகையா
[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை]

மறைவு:-
21-09 1991

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

"கிருஸ்ண வாசம்"
பன்னாலை,
தெல்லிப்பளை.

(18517)

31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

செல்வன்
சற்குணலிங்கம் அனுஷன்
(கொக்குவில் இந்துக் கல்லூரி 5ஆம் ஆண்டு மாணவன்)

எங்கள் அன்புச் செல்வத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலி.

அன்பு அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா, ஆச்சி, சித்தப்பாமார், பெரியப்பாமார், அத்தைமார், மாமாமார், பெரியம்மா, சின்னம்மாமார், தாத்தா.

நா. சற்குணலிங்கம்
பூநகரிம கத்தடி,
கொக்குவில்

(18518)

வடமராட்சிப் பகுதியில் வழமை நிலை திரும்புகிறது

பருத்தித்துறை, அக். 21

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் இயல்புநிலை உருவாகி வருகிறது. வெளியூர்களுக்கு இடம்பெயர்ந்தவர்களில் அனேகர் கடந்த இரண்டு தினங்களாகத் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பி உள்ளார்கள். தொடர்ந்தும் மற்றும்பலர் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

நெல்லியடி, மந்திகை, புலோலி, கிராமக்கோட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

புலோலி, பருத்தித்துறை, நெல்லியடி - கட்டைவேலி உடுப்பிட்டி, மருதங்கேணி பல நேரக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் திறக்கப்பட்டு, உணவுப்பொருள் விநியோகம் நடைபெற்றது.

கிராமக்கோட்டுச் சந்தியில் உள்ள விற்பனைத் திணைக்கள முகவர் நிலையத்தில் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசி, சீனி, மா போன்ற உணவுப் பொருள்கள் விற்கப்பட்டன.

வழமை நிலை திரும்பிவிட்டதாகவும், மக்கள் வீதிகளில் தாராளமாக நடமாடித் தமது அன்றாட அலுவல்களைக் கவனிக்கிறார்களாம்.

(அ-118,165)

தீவுப்பகுதி ஆசிரியர்கள் யாழ். பாடசாலைகளில்!

பணிபுரிய விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 21

தீவுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் யாழ். நகரில் உள்ள பாடசாலைகளில் பணிபுரிவார்கள்.

இதுசம்பந்தமாக யாழ். மத்திய கல்லூரில் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. புவேந்திரன் தலைமையில் நடந்த கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

தீவக ஆசிரியர்கள் பின்வரும் யாழ் பாடசாலைகளில் கடமையாற்றச் சமூகமளிக்க வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

★ புங்குடுதீவு கொத்தணி — நாச்சிமார் கோவிலடி பெரியபுலம் மகாவித்தியாலயம்.

★ வேலணை கொத்தணி — யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி.

★ மண்டைதீவுக் கொத்தணி — சென். மேரிஸ் வித்தியாலயம்

★ நயினாதீவு, நெடுந்தீவு கொத்தணிகள் — யாழ். மத்திய கல்லூரி.

[அ-131]

தீவுப்பகுதி அலுவலகங்கள் நகரில் இயங்குகின்றன

நிவாரணம் வழங்கவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக் 21

தீவுப் பகுதியில் நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாக அங்குள்ள அலுவலகங்கள் பல யாழ்ப்பாணம் பகுதியில் இயங்கத் தொடங்கியுள்ளன.

வேலணை உதவி அரச அதிபர் பணிமனை, யாழ். உதவி அரச அதிபர் பணிமனையில் ஒரு பகுதியில் இயங்கவுள்ளது.

அங்கு கடமையாற்றும் சகல திராம சேவை அலுவலர்களையும் இன்று காலை 9 மணிக்கு புதிய இடத்தில் — யாழ். உ. அ. அ. பணிமனையில் — ஒன்று கூடுமாறு வேலணை உதவி அரச அதிபர் திரு. செ. இளங்கோவன் கேட்டுள்ளார்.

சங்க தலைமை அலுவலகம், யாழ். மாநகரசபை வீதியில் உள்ள பிள்ளையார் ஸ்ரோர்ஸ் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

வேலணை உ. அ. அ. பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வந்து, யாழ் மாவட்டத்தில் தமது உறவினர் வீடுகளில் தங்கியிருப்போர், மேற்படி அலுவலகத்தில் அக்டோபர் மாதத்திற்குரிய தங்கள் நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அதேசமயம் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தினரும், தமது வாடிக்கையாளர்களுக்கு யாழ். மாநகரசபை கட்டடத்தில் வைத்து அக் மாதத்திற்குரிய நிவாரணத்தை வழங்கவுள்ளனர்.

[ஒ-167]

செஞ்சிலுவை வானை நோக்கி ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், அக். 21

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வானை நோக்கி ஹெலி ஒன்று நேற்றிரவு சுமார் 7 மணியளவில், நீர்வேலிப் பகுதியில் வைத்து வேட்டுக்களைத் தீர்த்தது.

எனினும் அதிஷ்டவசமாக வான் தப்பிவிட்டது.

பருத்தித்துறைக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த பெமுதே இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-15]

சண்டிலிப்பாய்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒருவர் உயிரிழந்தார். அந்த மாதுவின் 64 வயது மகளும், 43 வயதுப் பேரப்பிள்ளையும் மற்றும் இருவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

கணபதிப்பிள்ளை இரத்தினம் [வயது 86] என்ற மாதுவே உயிரிழந்தவராவார்.

மகேஸ்வரன் பரிமளம்பிகை [வயது 64], கந்தசாமி விஜயதேவி [வயது 43], மார்க்கண்டு தேவகி [வயது 19] மற்றும் காங்கேசன்துறையிலிருந்து இடம் பெயர்ந்த இராசேந்திரம் சதியவாணி [வயது 16] ஆகியோரே காயமுற்றனர்.

இந்த நால்வரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பாலாம்பிகை என்ற வயோதிபப்பெண்ணின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவீச்சில் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன. இரு வீடுகள் சிறிது சேதத்திற்குள்ளாகின.

மாகியப்பிட்டியில்

மீண்டும் நேற்றுக் காலை 10 மணிக்கு வந்த இரண்டு பெம்மர்கள் சண்டிலிப்பாய் வடக்கு மாகியப்பிட்டிப் பகுதியில் பொதுமக்களின் குடியிருப்புகள்மீது பல குண்டுகளை வீசின.

இதனால் ஒரு வீடு முற்றாக நாசமானது. அந்த வீட்டிலிருந்த தாயும் மகளும் உயிரிழந்தனர். உயிரிழந்தவரின் இரண்டு பிள்ளைகளும் மற்றும் இருவரும் காயமடைந்தனர்.

இராசரட்ணம் ஹரிஹரன் [வயது 45], அவரது மகள் ஆரணி [வயது 3] ஆகிய இருவருமே உயிரிழந்தனர்.

ஹரிஹரனின் மனைவை அர்ஜுன் [வயது 9] இடது காலில் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

ஹரிஹரனின் மற்றைய மகளான ஹம்சத்வேணி [வயது 7] மற்றும் சோமசுந்தரம் [வயது 60], சந்திரராணி [வயது 16] ஆகியோரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஒரு கார், இரு லாண்ட் மாஸ்டர்கள், ஒரு மோட்டார் சைக்கிள் என்பவையும் சேதமடைந்தன.

வீசப்பட்ட குண்டுகளில் இரண்டு வெடிக்காத நிலையில் காணப்பட்டன.

[உ-15-8-3-28-143-131]

இப்பத்திரிகை டியூ உதயன் பப்ளிக்கேசன் (லிமிற்டேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், 1 ஸ்டான்லி வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org